நீலகண்ட சாஸ்திரம்

சுவடியில் மற்றும் பதிப்பியல்
பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்பலைக்
கழகத்திற்கு அளிக்கப் பெற்றது.

பதிப்பு

பொ. வடிவேலன்

நெறியாளர்

விரிவுரையாளர்,
தமிழிலக்கியத் துறை,
சென்னைப் பல்பலைக்கழகம்.

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்பலைக் கழகம்
மெரினா வளாகம், சென்னை – 600 005.

மே 2003 - 2004

நீலகண்ட சாஸ்திரம்

சுவடியில் மற்றும் பதிப்பியல்
பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்பலைக்
கழகத்திற்கு அளிக்கப் பெற்றது.

பதிப்பு

பொ. வடிவேலன்

நெறியாளர்

விரிவுரையாளர்,
தமிழிலக்கியத் துறை,
சென்னைப் பல்பலைக்கழகம்.

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்பலைக் கழகம்
மெரினா வளாகம், சென்னை – 600 005.

மே 2003 - 2004

சுவடியியல்
மற்றும்
பதிப்பியியல்
பட்டயத்திற்காக
அளிக்கப்பட்ட
பதிப்பு வரிசை எண்.

பொ. வடிவேலன்
தமிழ் இலக்கியத்துறை,
சென்னைப் பல்பலைக் கழகம்,
சென்னை – 600 005.

ஆய்வாளர் உறுதிமொழி

சென்னைப் பல்கலைக் கழக சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டயப் பேற்றிற்காக 2003 – 2004 ஆம் கல்வியாண்டில் "**நீலகண்ட சாஸ்திரம்**" என்னும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாய்வேடு எனது சொந்த முயற்சியில் உருவானது என்றும், வேறு எந்தப் பட்டயத்திற்காகவும் இவ்வாய்வு அளிக்கப்பெறவில்லை என்றும் உறுதியளிக்கிறேன்.

ஆய்வாளர்

நாள் : – 10 – 2004
இடம் : சென்னை. (பொ. வடிவேலன்)

முனைவர்.

தமிழ் இலக்கியத்துறை,

சென்னைப் பல்கலைக் கழகம்,

சென்னை.

மேற்பார்வையாளர் சான்றிதழ்

சென்னைப் பல்கலைக் கழக "சுவடியியல் மற்றும் பதிப்பியல்" பட்டயப் பேற்றிற்காக 2003 – 2004 ஆம் கல்வியாண்டில் "**நீலகண்ட சாஸ்திரம்**" என்னும் தலைப்பில் உருவாக்கப்பட்டுள்ள இவ்வாய்வேடு என்னுடைய மேற்பார்வையின் கீழ் ஆய்வாளர் பொ. வடிவேலன் சொந்த முயற்சியில் உருவாக்கப்–பட்டுள்ளது என்று சான்றளிக்கிறேன்.

நாள் : – 10 – 2004 மேற்பார்வையாளர்

இடம் : சென்னை.

நன்றியுரை

சுவடியியல் மற்றும் பதிப்பியல் பட்டய வகுப்பில் சேர்ந்து இச்சுவடிப் பதிப்பைச் செய்ய வாய்ப்பளித்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் இலக்கியத் துறைத் தலைவர் பேராசிரியர் **வீ. அரசு** அவர்களுக்கும், முனைவர். **ய. மணிகண்டன்**, முனைவர். **ஜெயகுமார்** அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதுக்கல்லூரி துணை முதல்வர், தமிழ்த்துறைத் தலைவர் **ஆ. காதர் பாஷா**, முனைவர். **எஸ்.பி. ராஜா** அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

என் பெற்றோர், நண்பர் சி. நாகராஜன் அவர்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

நீலகண்ட சாஸ்திரம் எனும் ஆய்வுச்சுவடியை அளித்துதவிய அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தார்க்கும், சிறந்த முறையில் கணினி தட்டச்சு செய்து கொடுத்த சி.வி. இரமேஷ் கருணாகரன் அவர்களுக்கும் மற்றும் இருபால் நண்பர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

உள்ளடக்கம்

தலைப்பு		பக்கம்
ஆய்வு முன்னுரை	–	1
முதல் அத்தியாயம்	–	3
சுரம் நிவாரணத்திற்கு		
பாம்பு விஷத்தை அறுக்க		
விஷம் தீர்க்க		
இரண்டாம் அத்தியாயம்	–	10
வியாதிகளும் பாச்சு வித்தைகளும்		
மூன்றாம் அத்தியாயம்	–	13
கர்ப்பத்துக்கும், மலட்டுக்கும்		
பிசாசுக்கு பிரயோகம்		
தியான சுலோகம்		
நான்காம் அத்தியாயம்	–	18
பிள்ளை உண்டாவதற்கு		
சரீர புஷ்டியாவதற்கு		
ஐந்தாம் அத்தியாயம்	–	23
முயலகன் தீர்க்க		
ஆறாம் அத்தியாயம்	–	26
அஷ்ட்டாங்க யோகம்		
சாலம்படு		
பிராணாயமம்		
நிராலம்படும்		
ஏழாம் அத்தியாயம்	–	29
சடகறுமம் சொல்லுகிறோம்		
வசியத்திற்கு		
வித்து வேஷணத்திற்கு		
உச்சாடனத்திற்கு		
மாறானத்திற்கு		
ஐம்பத்தோரட்சரம்		
எட்டாம் அத்தியாயம்	–	34
சாந்தி ஓமம்		
நீண்ட ஆயுள் பெறுவதற்கு		
ஒன்பதாம் அத்தியாயம்	–	38
பூச விதி சக்கரம்		
அஷ்ட வயிரவராவது		
அஷ்ட திக்காவது		
வசியத்திற்கு	–	41
சக்கரவயணம்	–	41

ஆய்வு முன்னுரை

ஒட்டை விழுந்த ஏட்டை அச்சில் அமர்த்தி, நூல் எனும் அரியாசனம் ஏற்றுவது சுவடியியல் பதிப்பு எனப்படும். சுவடிப்பதிப்பின் பயனால் பல்வேறு நூல்கள் இன்று காலத்தை வென்று காட்சியளிக்கின்றன.

"உச்சியில் ஓங்கி ஒளிதிகழ் நாதத்தை
நச்சியே இன்பம் கொள்வார்க்கு நமன் இல்லை
விச்சும், விரிசுடர் மூன்றும், உலகுக்குத்
தச்சும் அவனே சமைக்க வல்லானே" – என்று

"வாழவழிகாட்டும் திருமந்திரம்" எனும் நூலில் கூறப்பட்டுள்ளது. இதன்படி (திரு. 442) சிரசின்மேல் விளங்கும் நாத ஒலியை விரும்பி இறை இன்பங்களை பெற்றவர்களுக்கு இறப்பில்லை. அக்கினி, சூரியன், சந்திரன் ஆகிய மூன்றினுக்கும் அஞ்சாத மூர்த்தியை போல் நீலகண்ட சாஸ்திரத்தையும் தினமும் தியானிப்பவர்களுக்கு இறப்பில்லை என்கிறது. மந்திரத்தையும், மருந்தையும் இணைத்து மனித வாழ்வில் வாழும் வழி வகைகளை எடுத்து இயம்புகின்றன. மந்திரத்தையும், தியான முறைகளையும், இறைவழிபாட்டையும் மனித வாழ்வில் ஏற்படும் வியாதிகளையும் அவை தீர்க்கும் முறைகளையும், மலடிகள் கர்ப்பம் தரிக்கவும், பேய் பிசாசு இவைகளில் இருந்து வாழ மந்திரத்தையும், மதி நுட்பத்தையும் ஒன்றாக இணைத்து, மருந்தை இடையில் நிறுத்தி சுகமளிப்பதை பற்றி கூறுகிறது.

சுவடி அமைப்பு

"ஹரி ஓம் நன்றாக" என்று இறை நாமத்துடன் தொடங்குகின்றது. ஒன்பது அத்தியாயங்களை உள்ளடக்கி, வசியத்திற்கும், சக்கர வயணத்திற்கும் வழி சொல்லும் முறைகளும் இதில் தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு அத்தியாயத்திலும் சில உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது. அத்தியாயத்தின் முடிவில் குரு நாமம் கூறி முடிவு பெறுகிறது.

வடமொழி கலப்பு

வடமொழி கலந்த நடையில் சொற்கள் அமைந்துள்ளது. உதாரணமாக சாஸ்திரம், சரஸ்வதி, திரியாக்ஷரம், ஸ்தானம், அஷ்ட்டதிக்கு என்று மேலும் பல வட சொற்கள் கலந்து காணப்படுகிறது.

செம்மொழியாம் தமிழியின் சிறப்பை கருத்தில் கொண்டு சில இடங்களில் வட எழுத்தை நீக்கியும் மாற்றம் செய்துள்ளோம். உதாரணமாக திரியாக்ஷரம் என்பதை திரியாட்சரம் என்றும், ஜபம் என்பதை செபம் என்றும் மாற்றி இவ்வாய்வேடு கையாளப்பட்டுள்ளது.

ஹரி : ஓம் நன்றாக

நீலகண்டசாஸ்திரம்

முதலாவது அத்தியாயம்

ஸ்ரீ நீலகண்ட குருவே நமஹ

நீலகண்டப் பொருள்

மகா புண்ணிய புருஷர்களுக்கும், மகாயோகி அவர்களுக்கும், மகா ஸ்ரீ அவர்களுக்கும் ஆகவேண்டியதாய் இருக்கப்பட்ட, திரியாட்சர மந்திரமாவது எப்படியெனில், மந்திரம் "ஓம் றீம் யம்" இந்த மூன்று அட்சரத்தையும் செபிக்கிற பாவனையாவது, சுரத்துக்கு சுவாமியைப் பால்வண்ணமாய், நீலகண்டமுமாய், சதுர்புஜமுமாய் இருக்கிறதாக பாவனை செய்து, தாமே சுவாமியாயும், முன்சொன்ன ரூபமாயும் இருக்கிறதாக நினைத்து, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை 108 முறை தியானம் பண்ணி, விபூதி தரிக்க சுரம் நிவாரணமாகும்.

விபூதியை தகட்டிலாவது, வெற்றிலையிலாவது அல்லது கையிலாவது வைத்து சக்கரம் எழுதி, அதில் திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை எழுதி, வேண்டிய மட்டும் தியானம் செய்து விபூதி கொடுக்கவும். இவ்வாறு **3–5** நாட்கள் கொடுக்க, சகல சுரமும் நிவாரணமாகும்.

பாம்பு விஷத்தை அறுக்க

சுவாமியை, சந்திரமண்டலத்து நடுவேயிருக்கிற அமிர்த சந்திரனை செஞ்சடையிலே தரித்தவராயும், பாவனை பண்ணி, திரியாட்சர மூல மந்திரத்தை 1100 முறை தியானம் பண்ணி, தன் கையினாலே தடவி இறக்கினால், பாம்பு விஷமென்றதெல்லாம் நாசமாம். பாம்பு கடித்து மூர்ச்சித்துக் கிடக்கிறவனும் எழுந்திருப்பான்.

3-ஆவது

அஷ்ட நாகங்களுக்கும், சுவாமியை சந்திர மண்டலத்தின் மத்தியிலே இருக்கிறவராயும், மூன்று கண்ணுடையவராயும், சந்திரனை சடாபாரத்திலே தரித்தவராயும், இடபாகத்திலே பார்வதி சமேததராய் இருக்கிறதாக பாவனை பண்ணி, திரியாட்சரமாகிய மூலமந்திரத்தை 1000 உரு செபித்து இருக்க, "ஆனந்தன், வாசுகி, தட்சன், கார்க்கோடன், பத்மன், மகாபத்மன், சங்குபாலன், குளிகன் முதலான எட்டு நாகங்களின் விஷம் தீரும்.

4-ஆவது

சுவாமியை அமிர்த நீத்தராய், கண்டராய், உமை சகிதராய் தான் அவராக பாவித்து, திரியாட்சரமாகிய மூலமந்திரத்தை 1100 உரு செபித்து, கண்ணினாலே திருஷ்டித்துப் பார்க்க, விஷமென்றதெல்லாம் நாசமாம்.

5-ஆவது

பாம்புகடித்து, மூர்ச்சித்து கிடக்கிறவனுக்கு, சுவாமியை, சந்திர மண்டலத்து மத்தியிலே இருக்கிறவராய், அமிர்த சந்திரனை சடாபாரத்திலே தரித்தவராயும் பாவனை பண்ணி, கையிலே நீரை வாங்கி, திரியாட்சர மந்திரத்தை 1100 உரு செபித்து நீரை தெளித்தால், விஷத்தினால் மூர்ச்சித்துக்கிடக்கிறவன், தூங்கி விழித்தாற்போல் எழுந்திருப்பான்.

6-ஆவது

சுவாமியை, அமிர்த சந்திரனுக்கு நடுவே இருக்கிறவராயும், அமிர்த கும்பத்தை கையிலே வைத்திருக்கிறவராயும் பாவனை செய்து, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை 1100 உரு செபித்து நீரை தெளிக்க, விஷம் நிவாரணமாகும்.

7-ஆவது

விஷமேறி, மூர்ச்சித்து கிடக்கிறவனுக்கு ஆக்ரமிச்சு மூர்ச்சித்து அடக்கமாகி அசந்து கிடக்கிறவனை, கோடி வஸ்திரத்தினாலே, சிரசு முதல் பாதம் வரைக்கும் தெரியாமல் மூடி, அமிர்த கும்பத்தினாலே வாங்குகிற பாவனையாய் பாவித்து, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தினாலே 1100 உரு செபித்து, நீரை சிரசிலே

தெளித்து, சிரசிலிருந்து பாதம் வரைக்கும் மூடியிருக்கிற கோடி வஸ்திரத்தை சிரசிலிருந்து பாதம் வரைக்கும் கிழிக்கவும். கிழிக்கிறபோது, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை 1100 உரு செபிக்கவும். இப்படி செய்தால், விஷமேறி மூர்ச்சித்து கிடக்கிறவன், நித்திரை தெளிந்தவன் போல் எழுந்திருப்பான்.

8–ஆவது
இதுவும் விஷம் தீர்க்க

பின்னையும், ஒரு சொம்பிலாவது, ஒரு சோடிப் பானையிலாவது, ஒரு முடாவிலேயாவது, நீரைக்கொண்டு வந்து கையிலே வைத்து, அந்த சலத்தை அமிர்தவர்ஷராய் பாவனை பண்ணி, அதில் திரியாட்சரமாகிய மூலமந்திரத்தை 1100 உரு தியானம் பண்ணி, பாம்புக் கடித்தவன் சிரசிலிருந்து பாதம் வரைக்கும் அபிஷேகம் பண்ண, அதிக மயக்கங் கொண்டவன், மயக்கம் தீர்ந்து எழுந்திருப்பான்.

9–ஆவது
விஷம் தீர்க்க

சுவாமியைப் பால்வண்ணமாய், இரண்டு புயமுடையவராய் பாவித்து, தான் அவனாய் நினைந்து, திரியாட்சரமாகிய மூலமந்திரத்தை, விஷமேறி மூர்ச்சித்து கிடக்கிறவன் சிரசிலே, நீரினால் தாபித்து, பின்பு,

பிரம்பினாலே திரியாட்சரத்தை 1100 உரு செபித்தபடி இருக்கவும், இவ்வாறாக 1–3–5–7–9 நாள் தட்டியிறக்க, விஷமென்றதெல்லாம் நிவாரணமாகும்.

10–ஆவது
விஷம் தீர்க்க

அந்தப் பிரம்பிலே, பரம அதிசயமாயிருக்கிற திரியாட்சரத்தை, அடி, நடு, முடி, இந்த மூன்றிடத்திலேயும் நிறுத்தி, முன்போல பாவனை செய்து சிரசிலேயிருந்து பாதம் மட்டும் சீக்கிரமாகத் தட்டியிறக்க விஷம் நீங்கும். தட்டியிறக்கும் போது, திரியாட்சரமாகிய மூலமந்திரத்தை 1100 உரு செபம், பண்ணிக் கொண்டு தட்டியிறக்கவும்.

11–ஆவது
விஷத்துக்கு

விஷமேறி அதிக மூர்ச்சையாய்க் கிடக்கிறவனுக்கு, சுவாமியை சந்திர நிறமாய், சரீரமெல்லாம் அமிர்த வர்ஷத்தினாலே, இடைவிடாது நினைத்திருக்கிற பாவனையாய், நாலு புயமும், மூன்று கண்ணும் உடையவராய், நவயசராய், உமைசகிதராய், பிரசன்னத்தை உடையவராய் கோமள தேகமாய் நினைத்து, தான் அவனாகப் பாவனை பண்ணி, விஷங்கொண்டு அசந்து கிடக்கிறவனை, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தினாலே, 1100 உரு பிரம்பினாலே தொட்டு இறக்க, மூர்ச்சை தெளிந்து எழுந்திருப்பான்.

12-ஆவது

இந்தப்படிக்கு ஒரு பிரம்பிலே திரியாட்சரமாகிய மூலமந்திரத்தை 1100 உரு செபித்து, பிரம்பினால் அடி, நடு, முடி என்ற இந்த மூன்றிடத்திலும் தன் கண்ணினாலே தட்டி, செபம் பண்ணி, யாரிடமாவது கொடுத்து கொண்டு போய் தட்டியிறக்கச் சொல்ல அவ்வண்ணமே தட்டி இறக்கினால் அந்த விஷம் நாசமாய்ப்போகும்.

13-ஆவது

கிரகம் பிடித்தவருக்கும், குழந்தைபாக்கியம் இல்லாதவாருக்கும், விஷம் தீண்டினவருக்கும், சகல வியாதிகாரருக்கும், இந்த திரியாட்சரமாகிய சக்கர மூலமந்திரத்தை விபூதியில் எழுதி, 1–3–5–7–9 நாள் அந்தி, சந்தி இரண்டு வேளையும், ஒரு வேளைக்கு 1100 உரு செபம் பண்ணி, அந்த வீபூதியை சலத்திலே போட்டு உள்ளுக்கு சாப்பிடச் சொல்லவும்.

14-ஆவது

இந்த விபூதியைக் குளத்திலோ, கிணற்றிலோ, ஏரிகளிலேயாவது அந்த சலத்திலே போட்டு உள்ளுக்கும் சாப்பிடவும். ஸ்தானமும் பண்ணவும். இங்ஙனம் சொன்னபடி செய்யுமிடத்தில் குருவை மறவாமல், குருபாதம் சிரசின் மேல்வைத்து தான் சரீரகஷ்டப்பட்டு

விஷத்தை நாசனம் பண்ணுகிறதும், வியாதிகள் தீர்க்கிறதும், புத்திர சந்தானம் உண்டு பண்ணுகிறதும், தான் உண்டு பண்ணி வைத்த பிராணன் போலவும், மகா புண்ணிய பலன்களைக் கொடுத்து, திருநீலகண்ட ருத்திர மகா உக்கிர மூர்த்தி உதிப்பார் என்றவாறு, முதல் அத்தியாயம் முற்றிற்று.

குரு கடாட்ஷம் உண்டாகவும்.

இரண்டாம் அத்தியாயம்

வியாதிகளும் பாச்சு வித்தை சொல்கிறது

1-ஆவது

வியாதிகளுக்கு வேறே பிரயோகம். விசித்திரமாய், அற்புதமாய், நேர்மையாய் இருக்கிறது என்பதைச் சொல்லுகிறோம். சகல வீக்கத்துக்கும், சகல ரோகங்களுக்கும், சகல கடிவிஷங்களுக்கும், வேப்பந் தழையினாலே, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை 1100 உரு செபம் பண்ணி, குழை வீச சகல வியாதிகள், விஷம், வீக்கமாகிய இவை எல்லாம் 3–5–7 நாட்களில் நிவாரணமாகும்.

2-ஆவது

விபூதி, மண்சலம், நிம்ப பத்திசம், பிரம்பு, இவைகளிலே முதலெழுத்தைத் செபித்து அந்த முதலெழுத்தை 108 உரு முதல், 1000 உரு வரை செபம் பண்ணி 3–5–7 நாள் கொடுத்துவர சகல சுரம் முதலாகிய ரோகங்களும் தீரும்.

3-ஆவது

வாய், கழுத்து, கண், மூக்கு, நெஞ்சு, செவி, குய்யம், கை, கால், விரல், நகம், முதுகு, சிரசு, இது முதலாகிய சர்வ

அங்கங்களிலேயும் வரப்பட்ட ரோகங்களுக்கெல்லாம், முதலெழுத்தை விபூதியிலோ, எண்ணையிலோ எழுதி, அந்த முதலெழுத்தை 1008 உரு செபம் பண்ணி, சகல ரோகங்களுக்கும் தடவிவர, உடனே சாந்தமாகும். பின்னையும் பத்துநாள் செபம் பண்ணி வந்தால் முற்றின ரோகங்கள், விஷம், சுரம் முதலாகியனவும் தீரும்.

4-ஆவது

சுரத்துக்கும், விஷத்துக்கும், பாச்சு வித்தையாக வினோதம் சொல்லுகிறோம். சுரம் பிடித்தவன், விஷம் தீண்டினவன், சிரசிலே முதல் எழுத்தை தாபித்து அந்த எழுத்தை 1100 உரு சொல்லி, தன் கையினாலேயாவது, வேப்பந்தழையினாலேயாவது தடவியிறக்கி, தூணிலோ, மரத்திலோ, நிலத்திலோ, செ(சு)வத்திலேயாவது தட்டியிறக்க, அந்நேரமே விடத்லே நிவாரணமாகி விடும்.

5-ஆவது

விஷந்தீண்டினவனின் சிரசிலே முதல் அட்சரத்தை ஒட்டி 1100 உரு செபித்து, அதன் பேரிலே இறக்கினாலும் தானே பாச்சு விஷம் அதமாகும்.

6-ஆவது

இந்த திரியாட்சர மூலமந்திரம் முதல் அட்சரத்தை தூணிலேயாவது, மரத்திலேயாவது, சுவற்றிலேயாவது

அட்சரத்தை ஒட்டி 1008 உரு செபம் பண்ணி, விஷம் தீண்டினவன் சிரசிலேயும், அந்த அட்சரத்தை ஒட்டி, அந்த அட்சரத்தை சொல்லிக் கொண்டே அவனை முட்டிக்கொள்ளச் சொல்லவும்.

இரண்டாம் அத்தியாயம் முற்று பெற்றது.

குருச்சிற்றம்பலம்.

மூன்றாம் அத்தியாயம்

கர்ப்பத்துக்கும் மலட்டுக்கும் பிசாசுக்கும் பிரயோகம்

1-ஆவது

மலடி பிள்ளை உண்டாக

அஞ்சு பலம் பசுவின் நெய்யை ஒரு கிண்ணத்தில் விட்டு, வலது கையில் வைத்து, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தின் மூன்று அட்சரத்தையும் அதில் தாபித்து, 108 உரு செபம் பண்ணி, அவள் இடது கையில் கொடுத்து, அதிகாலமே சாப்பிடச் சொல்லவும். இப்படி ஒரு மாதம் நித்தம் செபம் பண்ணி கொடுக்க மலடியாய் இருக்கிறவர்கள் கர்ப்பம் உண்டாகி இருப்பார்கள்.

2-ஆவது

நல்லெண்ணை, பால் நெய் இவைகளில், திரியாட்சரமாகிய மூன்று அட்சரத்தையும் இதில் தாபித்து, 108 உரு செபித்து ஒரு மாதங்கொடுக்க பிள்ளைபேறு உண்டாகும்.

3-ஆவது

பசுவின் நெய் மூன்று படியிலே, திரியாட்சரமாகிய மூன்று அட்சரத்தையும் அதில் தாபித்து, 300 உரு

செபித்து, அதிகாலமே ஸ்தானம் பண்ணி சூரிய நமஸ்காரம் பண்ணி, தினம் ஒரு பலம் விழுங்க கொஞ்சம் கொஞ்சமாய் சாப்பிட்டுக் கொண்டுவர பிள்ளை உண்டாகும்.

4-ஆவது

பஞ்சு குவியல் கூட்டி, அதிலே திரியாட்சரமாகிய மூலமந்திரம் மூன்று அட்சரத்தையும் எழுதி, 108 உரு செபித்து, அதிகாலை ஸ்தானம் பண்ணி சூரிய நமஸ்காரம் பண்ணி உள்ளுக்கு சாப்பிட, பிள்ளை உண்டாகும். இப்படி ஒரு மாதம் செபம் பண்ணி கொடுத்தால் பிறந்த நாள் முதல் மலடியாயிருக்கிறவளும் பூரண கர்ப்பினியாய் பிள்ளை உண்டாகியிருப்பாள்.

5-ஆவது

கெந்தர் வசிரகம் பிடித்தவளுக்கு, வெண்ணையிலே திரியட்சரமாகிய மூலமந்திரத்தை எழுதி, 108 உரு செபித்து, உள்ளுக்கும் மேலுக்கும் பூசிவர பிள்ளை உண்டாகும். இப்படி ஒரு மாதம் செபம் பண்ணிக் கொடுக்கவும்.

6-ஆவது

பிசாசு பிடித்து பிள்ளை இல்லாமல் இருந்தால், விபூதி சக்கரம் போட்டு அதில் திரியாட்சரமாகிய மூன்று

அட்சரமும் எழுதி வேளைக்கு 108 உரு செபம் பண்ணி, அந்தி, சந்தி இரண்டு வேளையும் கொடுத்து, உள்ளுக்கும் சாப்பிட்டு, மேலுக்கும் சர்வ அங்கமும் பூசிவர, பிடித்திருக்கிற பிசாசு எங்கே? எங்கே? என்று பறந்து கும்பிட்டுக் கொண்டு ஓடிப்போகும். பின்பு கர்ப்பம் உண்டாகும். இப்படி இரண்டு வேளையும், தினம் பதினைந்து நாளுக்குக் கொடுக்கவும்.

7-வது

பிள்ளை பெற்று செத்துப்போகிறவளுக்கு, உழக்கு பசுவின் பாலிலே திரியாட்சர மூன்று அட்சரத்தையும் எழுதி 108 உரு செபித்து அதிகாலமே ஸ்தானம் பண்ணி, நாற்பது நாளைக்கு கொடுக்க தீர்க்க ஆயுளாய்ப் பிள்ளைப் பிறக்கும்.

8-ஆவது

கர்ப்பம் தரித்த நாள் முதல், பத்து மாதத்துக்குள்ளாக இடை நடுவே பிள்ளை விழுந்து போகிறவளுக்கு. பசுவின் பாலும், நெய்யும், தேனும் கூட்டி திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை அதில் எழுதி, 108 உரு செபம் பண்ணி, நாற்பது நாளைக்கு அந்தி, சந்தி காலமே அவள் வீடு தூரம் வந்து, தலை முழுகின நாள் முதற் கொண்டு கொடுத்து வந்தால் பூரண கர்ப்பினியாவாள். அல்லது பசுவின் பாலில் சந்தனத்தைக் குழைத்து நாற்பது நாள் மந்திரிச்சுக்

கொடுக்க பூரண கர்ப்பினியாய் பிள்ளை பெறுவாள். அல்லது சலத்திலே நாற்பது நாளைக்கு இரண்டு வேளையும் மந்திரிச்சு கொடுத்தால் பூரண கர்ப்பினியாவாள்.

9-ஆவது

இரண்டு படி அரிசியிலே திரியாட்சரமாகிய மூல மந்திரமும், சக்கரமும் எழுதி, தினந்தினம் 108 உரு செபம் பண்ணி அந்தி, சந்தி இரண்டு வேளையும் நாற்பது நாளைக்கு உப்பு கலக்காமல் சாப்பிட பூரண கர்ப்பினியாவாள்.

10-ஆவது

நெய், பால், தயிர், தேன், சலம், சர்க்கரை இவைகளிலே திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை எழுதி 108 உரு செபம் பண்ணி, நாற்பது நாளைக்குக் கொடுக்க பிள்ளை உண்டாகும்.

11-ஆவது

பூத சாந்தி, பிசாசு பிடித்தவர்கள் தலையிலே அக்கினி மண்டலத்தையும், அதன் நடுவே அக்கினி பீசத்தையும் ஒட்டி, சூலமும், டமருகமும் தரித்த வீரசூரருத்திரனாகப் பாவித்து, சக்கரத்திலே திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை, 108 உரு தியானம் பண்ணி, அவள் முகத்தைப் பார்க்க, எப்பேர்ப்பட்ட பூதவேதாளம் எல்லாம் ஓடிப்போகும்.

12-ஆவது

பூத வேதாளம் முதலாகிய கிரகம் பிடித்தவர்களை உட்காரவைத்து, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை சக்கரம் போட்டு அதில் அந்த பீசத்தைக் கிரகிச்சு பதினாயிரம் உரு செபம் பண்ணி விபூதி போடவும்.

தியான சுலோகம்

"கட கட தாங்குறத தலம் வீம தேக மதிலோ, சனம் விபூரரிண சடா சலம் பம்பம தூளி தம விக்கிரகம் சர்வாபரண மதற மறுத்திரம் விகடலோசன மகறம் சிவம் பரம பமதூளிதம் சர்வாங்க நாக பரணம் பூசிதம்" – என்று இப்படி தியான மந்திரம் சொல்லி, விபூதி போட, சர்வ பூத, பிசாசு, சூனியம், ஏவல், வஞ்சனை இவைகள் எல்லாம் கண் காணாமல் ஓடிப்போகும்.

13-ஆவது

சலத்திலே அக்கினி மண்டலத்தை ஒட்டி, அதன் நடுவே அக்கினி பீசத்தையும் ஒட்டி, சூலமும், டமருகமும் தரித்த வீரசூரருத்திரனாகப் பாவித்து, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை 108 உரு செபம் பண்ணி, அபிசேகம் பண்ணிவைக்க, அந்த சலம் பட்டவுடனே சகல பூதப்பிசாசு, கந்தருவக் கிரகம், எச்சாக் கிரகம், குய்யக்கிரகம், கெளமர கேசரக்கிரகம், சோரக்கிரகம், சந்தியாக்கிரகம் இவைகளெல்லாம் ஓடிப்போம். இப்படி 1–2–3–5–7–9–11 வது நாள் அபிசேகம் பண்ணி வைக்க சகல கிரகங்களும் நிவாரணமாகும்.

மூன்றாம் அத்தியாயம் முற்றிற்று.

நான்காவது அத்தியாயம்

பிள்ளை உண்டாவதற்கு

ஸ்ரீ ஜாதிகள் சுகமாய் பிள்ளை உண்டாகிறதுக்கும், சரீரம் உலர்ந்து போகிறவர்களுக்கும், ருதுவாகாத பெண்கள் ருதுவாகிறதற்கும், முலையில்லாத பெண்களுக்கு முலை உண்டாவதற்கும், சர்வாட்சைகள் சொல்லுகிறோம்.

1-ஆவது

புசபத்திரி இலையிலே பிரிதிவு சக்கரம் எழுதி, அதில் நடுவே மூன்றாம் அட்சரத்தை எழுதி, அதற்கு பூசை செய்து 1000 முதல் 10000 வரை செபம் பண்ணி பிராணப் பிரதிஷ்டை மந்திரம் 108 உரு செபித்து பொன் குளிசமாவது, வெள்ளி குளிசமாவது அதிலே பொதிந்து, கழுத்திலேயாவது, கையிலேயாவது, தரித்துக்கொள்ள கர்ப்பம் உண்டாகும்.

2-ஆவது

திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை சக்கரத்துடனே விபூதியிலே எழுதி, வேளைக்கு 108 உரு தியானம் பண்ணி, நாற்பது நாளைக்கு அந்தி, சந்தி, அந்த விபூதி கொடுக்கவும். இந்த நாற்பது நாளைக்கும் முன் ரட்சை கட்டினவளுக்கும் இரண்டு வேளையும் விபூதி கொடுத்து வரவும். முன் எழுதி இருக்கிறபடிக்கு சகலமும் நடக்கும்.

3-ஆவது

விபூதியிலே பிரிதிவு சக்கரத்தின் நடுவே இரண்டாம் அட்சரத்தை எழுதி 1000 உருவாகுதல். அந்த இரண்டாம் அட்சரத்தை தானே செபித்து நாற்பது நாளைக்கு அந்தி, சந்தி இரண்டு வேளையும் அந்த விபூதி கொடுத்து வர பூரண கர்ப்பம் உண்டாகும். அதிக சொப்பனங்களும் நீங்கும்.

4-ஆவது

புசபத்திரி இலையிலே பிரிதிவு சக்கரம் எழுதி, அதன் நடுவே இரண்டாம் அட்சரம், மூன்றாம் அட்சரம் எழுதி, பிரணவத்தினாலே சுத்தி கட்டி, கெந்த புஷ்ப்ப சோடசவுபசாரத்துடனே பூசை பண்ணி எழுதின அட்சரத்தை தானே 1008 உரு செபித்து, வெள்ளி கலசத்திலே அடைத்து தரிசிக்க புத்திரனுண்டாகும்.

5-ஆவது

பச்சை மஞ்சளை அரைத்து, அதிலே இரண்டாம் அட்சரத்தை எழுதி, அட்சரத்தைத் தானே 1088 உரு தியானம் பண்ணி, அந்த மஞ்சளைக் கொடுத்து பூசிக்கச் சொல்லவும். இப்படி நாற்பது நாளைக்கு அந்தி, சந்தி விடாமல் மந்திரிச்சு கொடுத்து, குளிக்கச் சொல்லவும். தேக புஷ்டியும், ஸ்தனமும், சரீர காந்தியும், புத்திரனும் உண்டாகும்.

6-ஆவது

வெண்ணையிலே இரண்டாம் அட்சரத்தை எழுதி, அந்த அட்சரத்தை 1008 உரு செபித்து, பிருதக் காலத்திலே உள்ளுக்கு கொடுக்கவும். இப்படி ஒரு மாதம் மந்திரிச்சு கொடுக்க புத்திரருண்டாகும். அந்த ஒரு மாதமும் பகல் காலத்திலே நித்திரை பண்ணாமலிருக்கச் சொல்லவும்.

7-ஆவது

மஞ்சளை அரைத்து அந்த மஞ்சளிலே பிரிதிவு சக்கரம் எழுதி, மத்தியிலே மகாரம் எழுதி, அதில் இரண்டாம் அட்சரத்தை விந்து உடனே லகுச்சு அந்த இரண்டாம் அட்சரத்தை 1008 உரு செபித்து கொடுத்து பூசிக் குளிக்கச் சொல்லவும். இப்படி நித்தியம் மஞ்சள் மந்திரிச்ச 30 நாள், 40 நாள் குளித்து வந்தால், ரிஷியாயிருக்கிற பேர்கள் புஷ்டியும் ஸ்தன்னியமும் உண்டாகியிருப்பார்கள்.

8-ஆவது

புசபத்தி இலையிலேயாவது வெள்ளித் தகட்டிலேயாவது, பிரதிவு சக்கரம் எழுதி, மத்தியிலே சிகாரம் எழுதி, அதன் நடுவே இரண்டாம் அட்சரத்தை எழுதி சோடச வுபசாரமாய் பூசை பண்ணி, பின்பு இரண்டாம் அட்சரத்தை

1000 மாகுதல் 10000 மாகுதல் உரு செபித்து, குளிசமாடி கழுத்திலே கட்ட, தாதுவார்த்தனையும், ஸ்தன்னியமும் உண்டாகும். கலசத்துக்கெல்லாம் பிராணப் பிரதிஷ்ட மந்திரம் 108 உரு செபம் பண்ணி சர்வாங்கமும் பூசிக்குளிக்க, ஆணாகுதல், பெண்ணாகுதல் சரீரம் உலர்ந்து போகிற பேர்களுக்கு புஷ்டியும் ஆரோக்கியமும் உண்டாகும்.

9-ஆவது

கோமியம் கொண்டு வந்து, அதிலே மகாரம் எழுதி, மகாரத்தில் முதல் அட்சரத்தை எழுதி அந்த முதல் அட்சரத்தை 1000 உரு செபம் பண்ணி, சர்வ அங்கமும் பூசிக்குளிக்க ஆணாகுதல், பெண்ணாகுதல் சரீரம் உலர்ந்து போகிறவர்களுக்கு புஷ்டியும், ஆரோக்கியமும் உண்டாகும்.

10-ஆவது

புசபத்திரி இலையிலே சிகாரம் எழுதி, அதன் நடுவே மூன்றாம் அட்சரமெழுதி, அதற்கு சோடசவுபசார பூசை பண்ணி, அந்த மூன்றாம் அட்சரத்தை 1008 உரு செபித்து, பொன்னினாலாவது, வெள்ளியினாலாவது குளிசம் பண்ணி, அதில் வைத்து தடவிக் கொள்ள, தாதுவர்த்தனையும், ஆரோக்கியமும், புஷ்டித்தனமும், சரீர காந்தியும் உண்டாகும். இப்படி இரட்சைகள் செய்யும்

போது நெய்வேத்தியம், பால், பழம், வடை, பயறு, தேங்காய், அவல், கடலை, வஸ்திரம், தட்சணை, கரும்பு, தேன், இளநீர், இன்னமும் எது எது அகப்படுகிறதோ, அவைகளையெல்லாம் வைத்து பூசை செய்யவும். நவக்கிரக ஓமம் செய்யவும். கழிப்புகள் கழிச்சி, சகல காரியமும் செய்யவும். இப்படி கிராமம் தப்பாமல் செய்தால், நீலகண்ட மூர்த்தி உதவி செய்து ரட்சிப்பார். குருவை மறவாமல் செய்யவும்.

நாலாவது அத்தியாயம் முற்று பெற்றது.

குருவே ரட்சிக்கவும்.

ஐந்தாவது அத்தியாயம்

முயலகன் தீர்க்க

முயலகன் என்று சொல்லப்படுவது, வலிக்கிரப்போ சுவாமி மத்தியானத்துச் சூரிய கிரகணமாயும், திரிநேத்திரராயும், கையிலேந்திய சூலகமும், வாளும், சுக்கு மாந்தடியும், திகம்பரமேகலையும், நாகபாணமும், கொஞ்சிச் சடையும், அக்கினி மாலையும், கையிலேந்திய கபாலமும், இடது காலில் முயலகன் பாவனையுமாகத் தியானித்து, குடத்திலே சலங்கொண்டு வந்து, அந்த சலத்தில் திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை எழுதி, அந்த மூல மந்திரத்தை தானே 1000 உரு செபித்து முயலகன் பிடித்தவன் சிரசிலே அபிசேகம் பண்ணி வைக்கத் தீரும். முன் சொன்னபடிக்கும், பத்து சலத்திலே தினம் 3000 உரு விழுக்காடு 12 நாள் செபம் பண்ணி, உதய காலத்திலே அபிசேகம் பண்ண, முயலகன் நிவாரணமாகும்.

2-ஆவது

புசபத்திரி இலையில் முதல் அட்சரத்தை எந்த தட்டிலாகிலும் மதிற்கோணம் எழுதி, அதன் நடுவே மூன்றாம் அட்சரத்தையும் எழுதி, அதன் நடுவே முயலகன் பிடித்தவன் பேரையும், வியாதியையும் எழுதி, அதை சுத்தி அம்பத் தோட்சரம் வித்து உடனே எழுதி, அதற்குமேல் பிரணவத்தினாலே அனைத்துக்கட்டி பூசை பண்ணி,

பின்பு அந்த அட்சரத்தை 1000 ஆகுதல் 10000 ஆகுதல் உரு செபித்து குளிசமாடித் திரிக்க முயலகன் நிவாரணமாகும். பேரை முழுதிலும் எழுதினால் அடங்காது. ஆகையால் இரண்டு வகை நாமத்தினுடைய முதல் எழுத்தை எழுதி, நிவாரணயா நிவாரணயா என்று எழுதவும்.

3-ஆவது

பஞ்சக வியத்திலேயாகிலும், கோமியத்திலேயாகிலும் மூன்றாம் அட்சரத்தை எழுதி, அந்த அட்சரத்துக்கு நித்தம் 100 உரு செபித்து, ஒரு மாதம் உள்ளே கொள்ளச் சொல்ல முயலகன் நிவாரணமாகும். இதுக்கு மாலாமந்திரமும், தியானமும், விரித்த சடையும், வீரப்பல்லும், மூன்று கண்ணும், மகரகுண்டலமும், திருமேனியிலிட்ட விபூதி தூளிதமும், மயிர்க்காம்பு தோறும் அக்கினிச் சுவாலையும், காப்புறப்படுகிறதாய் பாவனை பண்ணி, முயலகன் பிடித்தவனை பாதத்தினாலே மிதித்துக் கொண்டு, திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை 100 உரு தியானம் பண்ணி விபூதி கொடுக்க, முயலகன் நிவாரணமாகும்.

4-ஆவது

விபூதியிலே திரியாட்சரம் எழுதி, அந்த திரியாட்சரத்தை 1000 உரு செபித்து உள்ளுக்குள் கொடுத்து, சரீரம் எல்லாம் பூசவும். இப்படி சலத்திலும்

எழுதி 100 உரு தியானம் பண்ணி, அபிசேகம் பண்ணி வைத்த பின்பு விபூதி தரிக்கவும். இப்படி 40 நாள் அதிகாலமே செய்துக் கொண்டு வர முயலகன் நிவாரணமாகும்.

5-ஆவது

உன்மத்தப்பயித்தியம் பிடித்தவர்களுக்கு, நெய், பால், தேன் இந்த மூன்றையும் நன்றாய்க் கூட்டி அதிலே திரியாட்சரம் எழுதி அத்திரியாட்சரத்தை 1000 உரு செபித்துக் கொடுக்கவும். இப்படி நித்தம் ஒரு மாதம் தப்பாமல் மந்திரித்து கொடுக்கவும். உன்மத்த பயித்தியம் நிவாரணமாகும்.

6-ஆவது

பசும் பால், பசுந்தயிர், பசு நெய், தேன், தண்ணீர், இவைகளில் எது அகப்படுகிறதோ அதில் திரியாட்சரமாகிய மூல மந்திரத்தை எழுதி அந்த மூலமந்திரத்தை 100 உரு செபித்துக் கொடுக்கவும். இப்படி சிந்தின கட்டளையாய் ஒரு மாதம் மந்திரிச்சு கொடுக்கவும். உன்மத்த பயித்தியம், இவைகள் நிவாரணமாகும். முன் சொன்ன தியானமாக பண்ண வேண்டியது.

ஐந்தாம் அத்தியாயம் முற்று பெற்றது.

குருவே துணை.

ஆறாவது அத்தியாயம்

அஷ்டாங்க யோகம் சொல்லுகிறோம்

வேதத்திலே சொல்லப்பட்டது இரண்டு வகை. அது எது எனில் (1) சால(ம்) படு என்றும் (2) நிரால(ம்) என்றும் இரண்டு வகை உண்டு.

சால(ம்)படு என்பது

சோம்பல், அதிக நித்திரை, அதிக பாஷாணம், வற்சித்த நிசாச பாஷாணம், கெட்டூரம், மனது சஞ்சலப்படாததும் ஆகும்.

நற் கருமமே பண்ண வேணும் என்கிறதும், துர்ச்சனனுடனே வார்த்தை சொல்லாததும், துஷ்ட ஸ்ரீகளுடனே உறவாடுகிறதும், அற்சனை வேண்டும். மனதினாலேயும், புத்தியினாலேயும் நினைக்க வொண்ணாது ஒரு சீவனுக்கும், செனங்களுக்கும், ஒரு பொல்லாப்பு நினைக்க ஒண்ணாது, பிறத்தியார் செய்தாலும், தான் விலகிக் கொண்டு தன் ஆசிரமத்து வழியே நன்மை பண்ணிக் கொண்டு இருக்க வேண்டும். சங்கார பிருந்தியிலே நிளவும் ஸ்ரீ கோபமும் துஷ்டருடனே இணக்கமாகாது. மெய் சொல்கிறதும் தேவதை உண்டென்கிறதும், குரோதம் இல்லாததும், விசுவாசமும்

திடமாயிருக்க வேண்டும். வாக்கு, பாதம், பாயிரு, உபங்கம் என்கிற கன்மயிந்திரியங்கள் ஐந்தையும் காப்பதற்கு, யெமம் என்று பெயர். தோத்திரம், தொக்கு, சட்சு, சிங்குவை, ஆக்கிருண என்கிற நானேந்திரியம் எனும் ஐந்தையும் காப்பதற்கு நியமம் என்று பெயர்.

பிராணயாமம்

தோத்திரம், காருடம், குக்குடம், பத்திரம், வச்சிரம், கூர்மம், விந்தம், மயூரம், அஞ்சுபத்மம், பத்மாசனம் இந்த ஆசனங்களிலே இருந்து கொண்டு ரேசக புரக கும்பத்தினாலே பிராணா பண்ணுவதற்கு. "பிராணாயாமம்' என்று பெயர்.

ஞான இந்திரியம் தன் மனது போனபடியே போகாமல் நிறுத்திக்கொள்வதற்கு, பிரத்தியாஷரம் என்று பெயர். மனதினாலே சிந்திக்கிறது "தியானம்" என்று பெயர். இவை எல்லாம் சால(ம்)படு என்று பெயர்.

2. நிராலம்படும் என்பது

மனதுக்கு சந்தோஷமான இடத்திலே, துஷ்ட செந்து இடத்திலே, மனுஷர் சஞ்சலமில்லாத இடத்திலே முன்சொன்ன ஆசனவிதிப்படி இருந்து நாசி முனையைப் பார்த்துக் கொண்டும் இதய கமலத்திலே அஷ்டதளம் அதே முகமாயிருக்கிறதை பிராணாயாமத்தினாலே

நீலகண்ட மூர்த்தியை தியானம் பண்ணுகிறதும், சந்திர மண்டலத்து நடுவே பார்வதி சமேதராய் நாலு புயத்தோடு கோடி சந்திரன் உதயம் செய்தாற்போல் உயிர்மதி, முகம், சிவந்த விண்(பிம்)பவதாரமும் விசால நயனமும் அந்த சந்திரனை தரித்த பார்வையும், அஷ்ட மாலையும், தாமரைப்பூவும், அபைய வரதமும் சர்வாபரணமும், குண்டல தரமும், பஸ்மதுரளிதமும், நெற்றியிற் கண்ணும், புலித்தோலுடையும், பாம்பினாலே பூ நூலும், அமிர்தத்தினாலே இடைவிடாமல் நிலைத்திருக்கும் மேனியும், இந்த ரூபத்தை உடைத்ததாகிய சாந்தமூர்த்தியை தியானித்து ஒரு மாதம் இப்படி தியானம் பண்ண மிறுத்தியு நிவாரணமாகும்.

ஒரு வருஷம் இப்படி அப்பியாசம் பண்ணினால் கிழவனும் இளைஞன் ஆவான். இப்படி மூன்று வருஷம் அப்பியாசம் பண்ணினால் நினைத்த இடத்திலே செல்லலாம். பத்து வருடம் இப்படி அப்பியாசம் பண்ணினால் கூடுவிட்டு கூடு பாயலாம். இருபது வருடம் இப்படி அப்பியாசம் பண்ணினால் அஷ்ட ஐசுவரியமும், தெய்வ போகங்களும் உண்டாயிருக்கும். மேன்மேலும் அப்பியாசம் பண்ணினால்தான் அவனாயிருப்பான்.

ஆறாம் அத்தியாயம் முற்று பெற்றது.

ஏழாவது அத்தியாயம்

சடகறுமம் சொல்லுகிறோம்

தம்பனத்துக்கு பிரிதிவு சக்கரம் இரண்டு எழுதி, அதன் நடுவே வட்டம் எழுதி, விஷந்தீண்டினவர்கள் அந்த வட்டத்தின் மத்தியிலே திரியாட்சரமாகிய மூல மந்திரத்தின் முதலெழுத்தை வச்சிர சமபட்டமாக எழுதி பின்பு பிரிதிவு, பீஜமும் எழுதி விஷந்தீண்டினவர்கள், பேய்பிடித்தவர்கள் இவர்களுடைய நெஞ்சிலே முகத்திலே இந்தச் சக்கரத்தை ஒட்டி எடுத்து உடனே பிரிதிவு பீஜமுங் கூட்டி 108 உரு செபிக்க தம்பனமாகும்.

2-ஆவது

தன் கையிலே விபூதியை வைத்து, முன் சொன்ன சக்கரத்தை அதிலெழுதி, முன் சொன்ன மந்திரத்தைப் 108 உரு செபித்து கையை சீக்கிரத்திலே மூடிக்கொள்ள விஷம், பூதம் தப்பிக்கும்.

3-ஆவது

பிரிதிவு சக்கரம் எழுதி அதில் பிரிதிவு முதலெழுத்தும் எழுதி இந்த சக்கரத்தை எதிர்த்தவன் முகத்திலே தன் கண்ணினாலே ஒட்டி பிரிதிவு பீசத்தை முதலெழுத்துடனே கூட்டி செபிக்க நாக்கு தப்பிக்கும்.

4-ஆவது

தம்பனத்துக்கு வச்சிர பீசத்தை சமபட்டமாக எழுதி அத்துடன் மூன்றாம் அட்சரம் எழுதி பீசத்துடனே மூன்றாம் அட்சரத்தைக் கூட்டி செபிக்க எதிரி வாக்கு தப்பிக்கும்.

இப்படிக்கு எதிரி முகத்திலேயாவது நெற்றியிலேயாவது தன் கண்ணினாலே எழுதி செபிக்க, தப்பனமாகும். இப்டிப தம் பனத்துக்கெல்லாம் சுவாமியை பொன்னிறமாக தியானிக்கவும்.

5-ஆவது

ஆக்கிறுஷனத்துக்கு எல்லாம் விபூதியிலே சந்தர மண்டலத்தை எழுதி அதில் முதல் எழுத்து வருண பீசமும் எழுதி முதலெழுத்தை வருண பீசத்துடனே கூட்டி செபித்து, அந்த விபூதியைப் போட பூதங்கள் ஆகிறுஷணமாம். சுவாமியை வெள்ளை நிறமாகத் தியானிக்கவும்.

6-ஆவது

வசியத்துக்கு, விபூதியிலே செய்ய சக்கரம் திரிகோணம் எழுதி அதில் மன்மத பீசமும், முதலெழுத்தை எழுதி பின்பு மன்மத பீசத்துடனே முதலெழுத்தும் கூட்டி செபம் பண்ணி விபூதி பூசிக் கொள்ள சகலமும் வசியமாகும். சுவாமியை சிவந்த வண்ணமாகத் தியானிக்கவும்.

7-ஆவது

வித்து வேஷணத்துக்கு விபூதியிலே பிரிதிவு சக்கரம் எழுதி அதில் முதலெழுத்தும், அக்கினி பீசமும், வாய்வு பீசமும் எழுதி பின்பு முதலெழுத்துடனே அக்கினி பீசமும், வாயுபீசமுங் கூட்டி செபித்து எதிரி பேரிலாவது, அவன் வீட்டிலாவது ஊதிப்போட வித்து வேஷணம் குணமாகும். இதற்கு சுவாமியைக் காளவர்ணமாகத் தியானிக்கவும்.

8-ஆவது

உச்சாடனத்துக்கு, விபூதியிலே வாய்வு சக்கரம் எழுதி, அதை முதல் எழுத்துடனே கூட்டி செபித்து எதிரிபேரிலாவது, அவன் வீட்டிலாவது ஊதிப்போட உச்சாடனமாகும். சுவாமியை புகைநிறமாகத் தியானிக்கவும்.

9-ஆவது

மாறனத்துக்கு, அக்கினி மண்டலம் எழுதி அதிலே முதலெழுத்தும் அக்கினி பீசமும் சம்புடமாக எழுதி அக்கினி பீசத்தை முதலெழுத்துடனே கூட்டி செபிக்க மாறனமாகும். சுவாமியை அக்கினி நிறமாகத் தியானிக்கவும். முன் உச்சாடனத்துக்கு செய்தது போலவே செய்யவும்.

ஏழாம் அத்தியாயம் முற்று பெற்றது.

ஐம்பத்தோரட்சரம்

ஐம்பத்தோரட்சரத்தினால் பிரயோகஞ் சொல்லுகிறோம். முதல் அகரத்தை வித்துவுடனே சொல்லி பின்பு திரியட்சரமாகிய மூல மந்திரத்தை சொல்லி செபிக்க சரீரவர்த்தனை உண்டாகும்.

2–ஆவது: அட்சரங்கூட்டி செபித்தால் சரீர காந்தி உண்டாம். 3–ஆவது: பாக்கியம் உண்டாம். 4–ஆவது: கீர்த்தியுண்டாம். 5–ஆவது: பலமுண்டாம். 6–ஆவது: மகாயோக்கியனாவான். 7–ஆவது : கோபமுண்டாம். 8–ஆவது: பெண்கள் மோகிப்பார்கள். 9–ஆவது: ஸ்ரீ போகவானாவான். 10–ஆவது: பரசென்ம தம்பனமாகும். 11–ஆவது: தேசத்தையுடையவன். 12–ஆவது: வாக்குண்டாம். 13–ஆவது: ஞானமுண்டாம். 14–ஆவது: கலைக்கியான முண்டாம். 15–ஆவது: தேசத்தை உடையவன். 16–ஆவது: சாம்ராச்சியமுண்டு. 17–ஆவது: ஆயிசு உண்டு. 18–ஆவது: இன்னார் என்று பேராம். 19–ஆவது: சகல கெனிக்கம் உண்டு. 20–ஆவது: ரோக நிவர்த்தி. 21–ஆவது: சத்ரு செயம். 22–ஆவது: சிரேஷ்டனாவான். 23–ஆவது: நற்குணமுண்டாம். 24–க்கு: ஆயுசு உண்டாம். 25–க்கு: மிறுத்தியுவைத்தள்ளும். 26–க்கு: நரை திரை மாறும். 27–க்கு: ஞானமுண்டாம். 28–க்கு: எல்லோராயும் தப்பிப்பான். 29–க்கு: காமுகனாவான். 30–க்கு: அழகு உண்டாம். 31–க்கு: இலக்கணம் வரும். 32–க்கு: தூர

தரிசனம் உண்டு. 33–க்கு: தளபதியாவான். 34–க்கு: தானியமுண்டு. 35–க்கு: தெய்வகதி உண்டு. 36–க்கு: ஸ்ரீமோகனாவான். 37–க்கு: செனமோகனாவான். 38–க்கு : செயமுண்டாம். 39–க்கு : விஷத்தை செயிக்கும். 40–க்கு : அதீத பலனாவான். 41–க்கு : ஸ்ரீ கெர்வமடங்கும். 42–க்கு : லெட்சுமி கடாட்சம் உண்டு. 43–க்கு : வாயு கதி உண்டு. 44–க்கு: வாக்கு கதி உண்டாகும். 45–க்கு: இலகு செய்தி உண்டு. 46–க்கு: அமிர்தத்தை உடையவன். 47–க்கு: சுகவானாவான். 48–க்கு: ரோக நிவர்த்தி. 49–க்கு: மிருத்தியுவை செயிப்பான். 50–க்கு: சவுபாக்கியம் உண்டு. 51–க்கு: சகல சித்துகளும் உண்டு.

இப்படி அட்சரத்தை மூல பீசாட்சரத்துடனே கூட்டி செபிக்க நினைத்த காரியங்கள் எல்லாம் கைகூடும். இந்த 51 அட்சரமும் செபிக்க வயணம் எப்படி என்றால் ? அகரம் முதல் ஷகரம் வரைக்கும் ஒவ்வொரு அட்சரம் முன்னே விந்துவுடனேலகித்து, பின்பு திரியாட்சரத்தை அதில் சேர்த்து செபிக்கவும்.

ஏழாம் அத்தியாயம் முற்று பெற்றது.

எட்டாவது அத்தியாயம்

சாந்தி ஓமம் சொல்லுகிறோம்

இந்த சாந்தி ஓமம் விதிப்படி செய்யப்பட்ட புண்ணிய புருஷாள். தன்னுடைய கிரகத்திலாவது, சுத்தி இருக்கப்பட்ட தலங்களிலாவது, முதலாவது கோசல கோமியத்தினாலே சுத்தி பண்ணி, புண்ணியனாக வாசனஞ் செய்து அந்த தலத்திலே மூல மந்திரத்தை ஆவாகனம் பண்ணி, நாலு மூலையாகத் தியானம் பண்ணி, மேலே நெல் பரப்பி, கும்பத்தை வைத்து, அந்த கும்பத்துக்கு தென்புறத்திலே ஒரு ஓம குண்டத்தை சதுரமாக ஏற்படுத்தி அதில் ஓமம் பண்ணக்கடவன். அது எப்படி என்றால்? ஆயுசு வேணும் என்றவனுக்கு அறுகம் புல்லினாலே 3000 ஆகுதி மூலமந்திரத்தினாலே பண்ணவும். ஒரு ஆகுதிக்கு மூன்று அறுகம் புல்லினால் பண்ணவும். சாபமிருந்து சாகக்கிடக்கிறவனுக்கு எள்ளும், நெய்யுமாக நித்தியம் 3000 ஆகுதி பண்ணவும். தீராத சுரத்துக்கு, மா இலையைப் பாலில் தோய்த்து தினம் மூவாயிரம் ஆகுதி மூனு நாள் செய்யத் தீரும்.

பிசசெத்திப் பிரமையாய்க் கிடக்கிறவனுக்கு, சிந்தில் தண்டினால் மவிற்கடை பிரமாணமாகத் தரித்து நாலு நாள், தினம் மூவாயிரம் ஆகுதி தேனும், பாலும், நெய்யும் கலந்து ஓமம் பண்ண சுரம் போகும். உலர்ந்து போயிருக்கும்

சரீரத்துக்கு பாலும், நெய்யுங்கலந்து ஓமம் பண்ண சரீரம் புஷ்டியாகும். குங்குலியமும் நெய்யுங் கலந்து ஓமம் பண்ண பூதப்பிசாசு ஒடிப்போகும். நாயுருவி சமித்தினாலே ஓமம் பண்ண பூதப் பிசாசு சாந்தமாய் ஓடிப்போகும்.

எருக்க இலையிலே ஓமம் பண்ணி, அவள் செபம் பண்ணிக் கொண்டிருக்குற பூதப் பிசாசுகள் ஓடிப்போகும். பலா சமுத்தினாலே ஓமம் பண்ண பிருமணிகம்வர்த்திக்கும், அரசஞ்சமுத்தினாலே ஓமம் பண்ண வீரிய புஷ்டியும் உண்டாகும். அத்திசமுத்தினாலே ஓமம் பண்ண புத்திரருண்டாகும். பச்சை முத்து, பவழம், புஷ்பராகம் இவைகளில் ஓமம் பண்ண புத்திராள் மெத்த உண்டாகும். நெல்லு முதலாகிய நவதானியத்தினால் ஓமம் பண்ணால் புத்திராளும் தானியமும் மெத்த உண்டாகும். பசும் பாலினாலே பண்ண பசுக்களினால் பாக்கியமும், தனமும் உண்டாம். எள்ளும், கடுகும் கூட்டி ஓமம் பண்ண சகலஆபத்துகளும் நீங்கும்.

உப்பும் தேனும் கூட்டி ஓமம் பண்ண பூதப்பிசாசுகள் ஆகிறுஷணமாகும். மஞ்சளும், தேனும் கலந்து ஓமம் பண்ண ஸ்ரீகள் ஆகிறுஷணமாவார்கள். ஊமத்தை விதை, உப்பு, கடுகு, வேப்பிலை இவைகளில் நெய்யாவது, தேனாவது கலந்து ஓமம் பண்ண சீக்கிரத்திலே தேவஸ்திரி ஆகிறுஷணமாகும். மருதஞ்சமுத்தினாலே ஓமம் பண்ண மூன்று லோகமும் வசியமாகும். தாணிச முத்தினாலே ஓமம் பண்ண சத்ரு உச்சாடனம்.

காக்கை இறகு, கூகை இறகு இவற்றை வேப்ப எண்ணையில் தோய்த்து ஏழு நாள் ஓமம் பண்ண, வித்து வேஷணமாகும். நெல்லை பாலிலே தோய்த்து ஓமம் பண்ண மழை பெய்யும். கருங்காலிசமுத்தை தேனில் தோய்த்து ஓமம் பண்ண முயலகன் தீரும். எருக்கும் நாயுருவியும் சேர்த்து ஓமம் பண்ண சுகத்திரம் போகும். வள்ளிசமுத்தினால் ஓமம் பண்ண பிரும்ம ராட்சரம் ஓடிப்போகும்.

மதுத்தியம் கூட்டி ஓமம் பண்ண பெரும்பாடு தீரும். நந்திய வட்டை சமுத்து ஓமம் பண்ண பிறமேகங்கள் போம். வேப்பசமுத்தினால் ஓமம் பண்ண வித்து வேஷணமாம். எள்ளினாலே ஓமம் பண்ண சர்வ ரோகங்களும் தீரும். அரலிச் சமுத்தினாலே ஓமம் பண்ண சத்துரு நாசனம். நாயுருவி சமுத்தினாலே ஓமம் பண்ண தீராத கிரகங்கள் எல்லாம் தீரும். நெல்லுப் பொறியினாலே ஓமம் பண்ண நினைத்தவனை கல்யாணம் பண்ணலாம். திரிகடுகினாலே ஓமம் பண்ண வாதரோகம் தீரும். மதுத்திரயம், கடுகுத்திரங் கூட்டி ஓமம் பண்ண சயக்சய ரோகம் தீரும்.

பருத்தி விரை, உப்பு, வசம்பு இந்த மூன்றும் சேர்த்து ஓமம் பண்ண வாலக்கிரகம் போகும். எருக்கஞ்சமித்து ஓமம் பண்ண ஆனை, குதிரை, மாடு இவைகளின் நோய் தீரும். வேப்ப எண்ணையில் ஓமம் பண்ண பதினெட்டு

குஷ்டமும் தீரும். நெய்யில் ஓமம் பண்ண ஆயிசும் ஆரோக்யமும் உண்டாகும்.

இங்ஙனம் சொன்ன பிரயாத்துக்கு எல்லாம் தரமாய் தாம் விசாரித்துக் கொண்டு நாள் ஒன்றுக்கு 1000 உருவாகுதல் மூவாயிரம் உருவாகுதல் 10000 உருவாகுதல் செபம் பண்ணி ஒரு நாளாவது, மூன்று நாளாவது, ஐந்து நாளாவது, ஏழு நாளாவது, ஒன்பது நாளாவது காலம் தப்பாமல் தினமும், அந்தந்த கூறுக்கு தகுந்தபடி தியானங்களும், ஓமங்களும், அட்சரங்களும் குருவை மறவாமல் செய்து வந்தால், இந்த திருநீலகண்ட ருத்திர மகாதேவர் கூடத்துணையிருந்து இரட்சிப்பார்.

எட்டாம் அத்தியாயம் முற்று பெற்றது.

ஒன்பதாவது அத்தியாயம்

பூசவிதி சக்கரம்

நீலகண்ட மூர்த்தியாகிய சுவாமியை ஆராதனை பண்ணுகிற வழிச்சொல்லுகிறோம். திரிகோணம் எழுதி அதன் நடுவே பிரணவம் எழுதி அதிலே சுவாமியின் மூல மந்திரமாகிய திரியாட்சரத்தையும் ஆவாகனம் பண்ணின பின்பு தியானம் செய்யவும்.

தியான சுலோகம்

"நீலகண்ட மகா தேவ தளசிச மகேஷ்வரா
வியாகேத தியசு ரேக்ஷணா நிடிட்டி
சிவ சிரம்பைய சகா"

என்று இந்த தியானத்தினாலே ஆவாகனம் பண்ணி அர்ச்சனை செய்து பின்பு சக்கரத்தை சுற்றிலும் விருத்தம் எழுதி அதன் மேல் நாலு இதழ் எழுதி அந்த நாலு இதழிலும், "குரு பரமகுரு, பரமேஷ்டி குரு, பரப்பிரம்ம குரு, பராபரகுரு" இந்த நாலு பேரையும் அவரவர் நாம மந்திரத்தினாலே நாலிதழிலும் ஆவாகனம் பண்ணி, "ஓம் நமா" என்று இந்த நாலிதழிலும் கூடப் போட்டு பூசை செய்து, அந்த இதழுக்கு மேல் ஒரு வட்டம் எழுதி அதன் மேல், ஐந்து இதழ் எழுதி அந்த ஐந்து இதழிலும், கணபதி, சுப்ரமணியர், கேஷத்திரபாலன், துர்கை, சரஸ்வதி இந்த

ஐந்து தேவதைகளும் ஆவாகனம் செய்து, அதில் "ஓம் நமா" என்று கூடல குச்சாலே பூசை செய்து, அதற்கு மேல் சதுரகசியமாய் எண்கோணம் இட்டு, அதில் எட்டு இதழிட்டு அந்த எட்டு இதழிலும் வைராக்கிய சக்தி, அக்கியானசக்தி, விஞ்ஞான சக்தி, இச்சாசக்தி, கிரியாசக்தி, வித்தியதான சக்தி, ஞானாசக்தி, சங்க நிதி, மத்துமநிதி இந்த எட்டு தேவதையையும் அவரவர் நாம மந்திரத்திலே ஆவாகனம் பண்ணி பூசை செய்து அதற்கு மேலே மூன்று வனாசதுரகசியமாய் நாலு புறமும் நாலு வாசல் விட்டு உள்வீதியில் அஷ்ட வயிரவர் பீசம் போடவும்.

அஷ்டவயிரவராவது

அசிதாங்க பயிரவன், சங்கரா பயிரவன், சண்ட பயிரவன், குரோதன பயிரவன், உன்மத்த பயிரவன், கபால பயிரவன், பிஷணபயிரவன், சங்கரா பயிரவன் இந்த எட்டு பயிரவன் பீசத்தை எட்டு திக்கிலும் போடவும். மறு வீதியில் அஷ்டதிக்கு பாலகர்கள் பீஜம் போடவும்.

அஷ்டதிக்காவது

1. இந்திரன், 2. அக்கினி, 3. எமன், 4. நிருதி, 5. வருணன், 6. வாய்வு, 7. குபேரன், 8. ஈசானன்.

ஆக அஷ்டதிக்கு பாலகர்களின் பீசம் எட்டையும், எட்டு திக்கிலும் போடவும். இந்த மட்டும் சக்கரம் சரிஎன்று அறியவும்.

அதற்கு மேல் இங்ஙனம் சொன்ன தேவதைகளுக்கு எல்லாம் பிரணவம் ஆதியாகவும் நரமம் அந்த முகமாகவும் செய்யவும். பிரணவத்தின் மத்தியிலே நீலகண்ட மூர்த்தி சோடச உபசாரத்துடனே பூசை செய்து திரியாட்சரமாகிய மூல மந்திரத்தினாலே தியானம் செய்து அர்ச்சனை பண்ணின பின்பு தியான சுலோகம் சொல்லவும்.

"ஓம் நமோ நீலகண்டாயா சர்வப்பிரசித்தியாயாயேதாவே. பிரசிதப்பரமேசுவரன், பிரசிதப் பரமேஸ்வரா செய சத்துவா. அரே சான திரிபுராந்த சங்கரா செயவே. மரேசான செயா, சர்வப்பதிா செய, கௌரி பதே சம்புவே செயா, பிரணதார்த்தி பஞ்சனப் பிரியா திராக்கிரக இமாம் கிருபாயாதேவ சாரணா கதவத்ஸலா" என்று இப்படி "தியான சுலோகம்" சொல்லி பிரார்த்திக்கவும். தினந்தினம் இப்படி பூசை செய்து கொண்டு வர சகல காரியங்களும் சித்தியாகும்.

குருவே துணை.

ஒன்பதாவது அத்தியாயம் முற்று பெற்றது.

வசியத்திற்கு

வசியத்திற்கு குரு குரு என்று செபிக்கவும். ஆகிறுஷணத்துக்கும் குரு குரு என்று செபிக்கவும். (செவி சுவடியில் டுகு டுகு என்று எழுதப்பட்டுள்ளது.) பணத்துக்கு தம்மய தம்மய என்று செபிக்கவும். உச்சாடனத்துக்கு உச்சாடனயா உச்சாடனயா என்று செபிக்கவும். விந்து வேஷணத்துக்கு விந்து வேஷணாயா விந்து வேஷணாயா என்று செபிக்கவும்.

மாறாடணத்திற்கு, மாறணாயா மாறணாயா என்று செபிக்கவும். இப்படி அந்தந்த தொழிலுக்கு அந்தந்த சக்கரம் எழுதி அதில் இந்த பிரகாரம் எழுத்துக்களை எழுதி செபிக்க சகல காரியங்களும் சித்தியாகும்.

தேவ நத்தகே என்பது எமனுடைய "சரீரம்" என்பது வர்த்தமான வர்த்திவுயமானன் என்கிறது. இப்போது வந்திருக்கிறதும் இனிமேல் வரப்போகிறதும் என்று அறியவும். என்று தனக்கு செபித்து கொள்கிறது. தேகவர்த்தமான வர்த்திஷ்யமான என்று அதற்கு மேற்கூறியதை சொல்லி செபிக்கவும்.

சக்கர வயணம்

பிரிதீவு சக்கரம், நாற்கோணம், அப்பு சக்கரம், இருகோணம், தேயு சக்கரம், முக்கோணம், வாய்வு

சக்கரம், அறுகோணம், ஆகாச சக்கரம், வட்டம் விந்துவாகிறது. விருத்தம் நதிரமண்டலமாகிறது, வட்டம் பிரணவமாகிறது, ஓங்கார அக்கினி சக்கரமாவது, முக்கோணம் இதில் போடப்பட்ட பீஜம், ஓம், மம், நம் இந்த மூன்று அட்சரமும் சக்கரத்துக்கும் தேவதைகளுக்கும் மூல பீஜ அட்சரத்துடனே கூட்டி செபிக்கவும். இந்த மூன்று எழுத்தும் சக்கரத்திலும், இதழிலும், நாலு மூலை வெளியிலும், திரிகோண வெளி மூன்றிடத்திலும் எழுதவும்.

இந்த நீலகண்ட மூர்த்தியினுடைய மூல மந்திரமாகிய திரியாட்சரத்தை ஒன்பதாம் அத்தியாயத்தில் சொல்லி இருக்கிறபடிக்கு சக்கரம் எழுதி அதில் இந்த பீசங்களை எல்லாம் அடைத்து சோடச உபசார பூசையுடனே தூப தீப நெய்வேத்தியம் முதலானவை வைத்து பூசை செய்து நித்தம் ஒரு நாள் தப்பாமல் நாள் ஒன்றுக்கு 1100 செபம் விழுக்காடு உருவேத்தி, இப்படி நாற்பத்தைந்து நாளைக்கு உருவேறினால் உடவாரம். 25 முதல் 50 ஆயிரம் உருவாகுது.

அந்த மந்திர சித்தி பண்ணிக்கொண்டு பின்பு ஓம தர்பணம், பிராமண போசனம் முதலாகியதும் செபித்து பின்பு இதில் சொல்லியிருக்கிற சகல காரியங்களும் விபூதியினாலும், வேப்பந்தழையினாலும், பிரம்பினாலும்,

சலத்தினாலும், மண்ணினாலும், தன் முந்தாணியினாலும் தியானம் பண்ணி மந்திரிச்சு பார்க்க சகல பூதப்பிரேத பிசாசுகளும், சகல விஷங்கள், சகல சுரம் முதலாகிய ரோகங்களும் இன்ன பேர் சொன்ன மாத்திரத்திலே சகல தோசங்களும் நிவாரணமாய் பறந்தோடிப்போகும்.

தான் பார்க்கும் போது தன்னை அந்த நீலகண்ட ருத்திர மூர்த்தியாக பாவித்து சுவாமி பேரில் மூனே முக்கால் நாழிகை ஒருமனதாய் இருந்து செபம் பண்ணி விபூதி கொடுத்தால் சகலமும் நிவர்த்தியாகிறது. கர்ப்பத்தானம் உண்டாகிறது.

முற்றும்.

குருவே துணை.